**செ. கு. எண்: 004** **நாள்: 05.01.2020**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 5.1.2020

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், பொன்னன்படுகை கிராமத்தில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பெருமழையின் காரணமாக பயன்பாட்டில் இல்லாத சமையல் கூடம் இடிந்து விழுந்ததில், **8–**ம் வகுப்பு படித்து வந்த திரு. ரஞ்சித் குமார் என்பவரின் மகன் மாணவன் செல்வன் செல்வக்குமார் என்பவர், பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, உயரிய சிகிச்சை அளிக்கப்பட்டு, பின்னர் அச்சிறுவனுடைய வலது கை அகற்றப்பட்டது என்ற செய்தி எனக்கு மிகுந்த வேதனை அளித்தது.

மதுரையில் உள்ள தனியார் மருத்துவனையில் சிகிச்சை பெற்று வரும் செல்வன் செல்வக்குமாருடைய மருத்துவ செலவு முழுவதையும் முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு மூலம் தமிழ்நாடு அரசே ஏற்றுக் கொள்ளும். மேலும், சிறுவன் செல்வக்குமார் அவர்களின் குடும்பத்திற்கு ஏற்கனவே இரண்டு லட்சம் ரூபாய் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

சிறுவனின் எதிர்காலத்தினை கருத்தில் கொண்டு **முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய், சிறுவன் செல்வக்குமார்** அவர்களின் குடும்பத்திற்கு வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**